**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** தலைவர்
**K.சந்திரசேகரன்,B.A** பொதுச்செயலாளர்
**B.தியாகராஜன், M.Com.,** நிதிச்செயலாளர்

கடித எண்: 105/19
06-06-2019

பெறுநர்,
தலைமைப் பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - எண்ணூர்அனல்மின்நிலையம் - உபரி என்று கூறி 73 களப்பிரிவு ஊழியர்களை ஊர்மாறுதல் செய்வது குறித்து.

********

எண்ணூர் அனல்மின் நிலையத்தில் பணி ஆற்றிவரும் களப்பிரிவு ஊழியர்களுள் 73நபர்களை உபரி என்றுகூறி வேறுவட்டங்களுக்கு மாறுதல் செய்திட தலைமைப்பொறியாளர் எண்ணூர்அனல்மின்நிலையம் அவர்கள் பரிந்துரை அனுப்பியுள்ளதாக அறியவருகிறோம்.

கல்விஆண்டு துவங்கிவிட்டதால் தற்சமயம் ஊழியர்களுக்கு மாறுதல் வழங்கினால், ஊழியர்களும் அவர்களது குழந்தைகளும் மிகவும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்பதால் ஊழியர்களுக்கு மாறுதல் உத்திரவுகள் வழங்கிடாமல் அவர்கள் தொடர்ந்து எண்ணூரிலேயே பணிபுரிந்திட அனுமதித்திட வேண்டுகின்றோம்.

நிர்வாக நலன்கருதி எண்ணூர் அனல்மின்நிலையத்திலிருந்து ஊழியர்களை மாற்றுவது தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் அவர்களை வடசென்னை-I-அல்லது-II-வட்டங்களுக்கு மாற்றிட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் :
1. வட்டச்செயலாளர், எண்ணூர் அனல்மின்நிலையம்.
2. இணைச்செயலாளர், எண்ணூர்.
3. உதவிப்பொதுச்செயலாளர், சென்னை.